**கொள்கைச் சுருக்கம்**

LAW & SOCIETY TRUST

# இலங்கையில் சித்திரவதையினால் பாதிக்கப்பட்டு அதன் பாதிப்புடன் வாழ்ந்து வருபவர்களுக்கு அரச பாதுகாப்பினை அறிமுகப்படுத்தல்

**ஜுன் 2021**

சித்திரவதையினால் பாதிக்கப்பட்டு வாழ்பவர்களும் அவர்களின் குடும்பங்களும் அனுபவிக்கும் தனித்துவமான அனுபவங்களைக் கையாள்வதற்காகச் சித்திரவதையினால் பாதிக்கப்பட்டு வாழ்பவர்களைப் பாதுகாக்கும் ஒரு கொள்கைப் பாதுகாப்பிற்கான தேவையினை இந்தச் சுருக்கம் கொள்கை வகுப்போருக்குக் கோடிட்டுக்காட்டுகின்றது. பாதிக்கப்பட்டு வாழ்பவர்கள் அனுபவிக்கும் பல்வேறு வகையான தனிப்பட்ட, சமூக ரீதியான மற்றும் புறநிலையான சவால்களை விபரிக்கும் ஆய்வினையும் அரச பாதுகாப்பில் காணப்படும் குறைபாடுகளையும் இந்தச் சுருக்கம் அடிப்படையாகக் கொண்டுள்ளது.

## அறிமுகம்


அரசியலமைப்பின் உறுப்புரை 11 இன் கீழ் சித்திரவதைக்கான பூச்சிய சகிப்புத்தன்மைக்காக இலங்கையில் சட்ட மற்றும் கொள்கைச் சட்டகம் கடப்பாடு கொண்டுள்ளது. மேலும் 1994 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சித்திரவதைக்கு எதிரான மற்றும் குரூரமாகவும் மனிதாபிமானமற்ற முறையிலும் அல்லது அவமானப்படுத்தும் வகையிலும் நடத்தப்படுதலுக்கு எதிரான சமவாயத்தின்(CAT Act)கீழும் 2017 - 2022 ஆம் ஆண்டுகளுக்கான மனித உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்தும் இலங்கையின் தேசிய செயற்திட்டத்தின் கீழும் சித்திரவதை தடைசெய்யப்பட்டுள்ளது. சித்திரவதைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சமவாயத்திற்கு இலங்கை தரப்பாக உள்ளது. மேலும்,2016 ஆகஸ்டில் இருந்து தனிப்பட்டவர்களின் முறைப்பாடுகளைப் பெற்றுக்கொண்டு பரிசீலிப்பதற்கான சித்திரவதைக்கு எதிரான குழுவின் தகைமையினைக் கருத்திற் கொண்டு, சித்திரவதைக்கு எதிரான சமவாயத்திற்கான தெரிவுக்குரிய மரபொழுங்கினை(Optional Protocol to the Convention against Torture - OPCAT)2018 சனவரியில் இலங்கை ஏற்று அங்கீகரித்துள்ளது.

எவ்வாறாயினும், இந்தக் கடப்பாட்டிற்கும் இலங்கையர்களின் வாழ்க்கை யதார்த்தங்களுக்கும் இடையில் கணிசமான இடைவெளி காணப்படுகின்றது. உண்மையிலேயே, அரச அதிகாரிகளினால் நடைமுறைப்படுத்தப்படும் சித்திரவதை முறைமை வாய்ந்தது என்றும் பரவலானது என்றும் சர்வதேச மற்றும் உள்நாட்டு மனித உரிமைப் பாதுகாவலர்கள் மீண்டும் மீண்டும் அடையாளம் கண்டுள்ளனர். பாரதூரமான மற்றும் பாரிய வன்முறை வடிவங்களுக்குச் செயற்திறன்மிக்க நிறுவன ரீதியான பதிற்செயற்பாட்டினை உருவாக்குவதற்கு இலங்கை வரலாற்று ரீதியாகத் தவறியுள்ளது. வீடுகளிலும் பாடசாலைகளிலும் உயர்கல்வி நிறுவனங்களிலும் சமய நிறுவனங்களிலும் வன்முறையினைச் செயற்திறனுடன் தடுத்து நிறுத்துவதற்கும் நாடு போராடி வருகின்றது.

சித்திரவதை எனும் குற்றச்செயலைப் பொறுத்த அளவில், குறிப்பாக, சித்திரவதைக்கு எதிரான சட்டத்தின் 26 வருடங்களில், 47 சித்திரவதைச் சம்பவங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வெறும் 9 சம்பவங்களில் மட்டுமே குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இவற்றிலும் 6 குற்றத்தீர்ப்புக்கள் மேன்முறையீட்டின் கீழ் உள்ளன[1]. இலங்கை மனித உரிமைகள்

[1]சட்ட மாஅதிபரிடம் சட்டத்திற்கும் சமூகத்துக்குமான அறநிலையம் சமர்ப்பித்த தகவலறியும் விண்ணப்பத்துக்கு வழங்கப்பட்ட பதில், 2018 ஜுலை.

ஆணைக்குழுவிடம் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளுடன் ஒப்பிடுகையில்[2], முறைப்பாடு செய்யப்பட்டவற்றில் கிட்டத்தட்ட 99 சதவிகிதத்துக்கும் அதிகமான முறைப்பாடுகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. 0.2 சதவிகிதத்திற்கும் குறைவானவற்றிலேயே குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது[3]. இதற்கான பொறுப்பின் ஒரு பகுதி இலங்கையின் குற்றவியல் நீதி முறைமைக்கும் உரியதாகும். இதில், அனுபவங்களை வேறாக்கல், பாதிக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் போதிய பாதுகாப்பின்மை மற்றும் நீண்ட தாமதங்கள் ஆகியவை உள்ளடங்குகின்றன[4].வன்முறை ஏற்றுக்கொள்ளப்படுகின்ற, சட்டக்காப்பு அபரிமிதமான அளவு காணப்படுகின்ற, பரிகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் பலவீனமான ஒரு நீதி முறைமையில் பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தப்படுகின்ற சமூக மற்றும் நிறுவனக் கட்டமைப்பின் இந்தப் பரந்த சூழமைவிலேயே சித்திரவதையினால் பாதிக்கப்பட்டு வாழ்ந்து வருபவர்களினதும் அவர்களின் குடும்பங்களினதும் அனுபவங்கள் அமைந்துள்ளன.




[2]மனித உரிமைகள் ஆணைக்குழு (HRCSL) 8 வருட காலப்பகுதியில்சித்திரவதை மற்றும் மோசமாக நடத்தப்படல் தொடர்பாக 4362 முறைப்பாடுகளைப் பெற்றுள்ளதாக அறிக்கையிட்டுள்ளது (ஜனவரி 2010 முதல் 2018 டிசம்பர் வரை). சித்திரவதைக்கு எதிரான ஐநா குழுவுக்கு ஆணைக்குழு 2016 இல் சமர்ப்பித்த அறிக்கையில் இருந்து பெற்ற தகவல்கள்.https://www.hrcsl.lk/wp-content/uploads/2020/01/Report-to-CAT-Committee-.pdf

[3]26 வருடங்களில் எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கை தொடர்பில் சட்ட மாஅதிபர் அலுவலகம் வழங்கிய தகவல்களை இந்த எண்ணிக்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 8 வருடங்களில் பெற்ற முறைப்பாடுகளுடன் ஒப்பிடுகின்றது. இதன் அர்த்தமாவது, குற்றத்தீர்ப்புக்களின் சதவிகிதம் மிகவும் குறைவு என்பதாகும்.

[4]சட்ட விவகாரங்களுக்கான பாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுவினால் தயாரிக்கப்பட்ட 2017 செப்டெம்பர் 20 ஆம் திகதிய குற்றவியல் நீதியின் துரிதமான மற்றும் வினைத்திறன்மிக்க நிர்வாகம் பற்றிய பரிந்துரைகளில் பாரதூரமான குற்றச்செயல் தொடர்பான வழக்குக்கு சராசரியாக 17 வருடங்கள் எடுப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. டிசம்பர் 2020 இன் போதுள்ளவாறாக நீதிமன்றத்தின் முன் 20 வருடங்கள் தீர்க்கப்படாது நிலுவையாக வழக்குகள் இருப்பதாக நியூஸ்வயரில் (Newswire - shorturl.at/ dyL58)அறிக்கையிடப்பட்டுள்ளது.

## ஆய்வு

சித்திரவதை மற்றும் மோசமாக நடத்தப்படல் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டு வாழ்ந்து வருபவர்களுக்குக் கிடைக்கக்கூடியதாக இருக்கும் முறைசார் பாதுகாப்புப் பொறிமுறைகளைப் புரிந்துகொள்வதற்காகவும் இந்தப் பாதுகாப்புப் பொறிமுறைகளை அணுகுவதில் மனித உரிமைகள் நிறுவனங்களும் வறிய சமுதாயங்களில் வாழ்ந்து வரும் சித்திரவதை மற்றும் மோசமாக நடத்தப்பட்டதால் பாதிக்கப்பட்டவர்களும் முகங்கொடுக்கும் நடைமுறை அனுபவங்களைப் புரிந்துகொள்வதற்கும் இவ்வாறான சமுதாயங்களைச் சேர்ந்த மக்கள் தமக்குப் பாதுகாப்பினைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கும் பல்வேறு வழிகள் பற்றிப் புரிந்துகொள்வதற்கும் பாதுகாப்பில் இவர்கள் முகங்கொடுக்கும் குறைபாடுகளைப் புரிந்துகொள்வதற்கும் இலங்கையில் ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது. சட்டச் சட்டகத்தின் மீளாய்வு, கடந்த 10 வருடங்களை உள்ளடக்கும் இலங்கையில் சித்திரவதை பற்றிய முறைப்பாடுகள் பற்றிய ஆவணங்களின் மீளாய்வு, உளவியலாளர்கள், மருத்துவர்கள், சட்டத்தரணிகள், ஆய்வாளர்கள் மற்றும் செயற்படுனர்கள் ஆகியோருடன் நடத்தப்பட்ட பிரதான தகவலாளர் நேர்காணல்கள் இருபது மற்றும் சித்திரவதையினால் பாதிக்கப்பட்டு வாழ்ந்து வருபவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் அனுபவங்களின் மூன்று சம்பவக் கற்கைகள் ஆகியவற்றினை முறை உள்ளடக்குகின்றது.

## கண்டறிந்தவைகள்

1. **சித்திரவதையின் பல வடிவங்கள் (உடல் ரீதியானவை, மனோரீதியானவை மற்றும் பாலியல் ரீதியானவை):** சித்திரவதைக்கு முகங்கொடுத்து அதன் பாதிப்புடன் வாழ்ந்து வருபவர்கள் அவமானப்படுத்தும் வார்த்தைகளுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் இகழ்ச்சிகளுக்கும் பயமுறுத்தல்களுக்கும் முரட்டுத்தனமாகத் தள்ளப்படுதலுக்கும் கன்னத்தில் அறையப்படுதலுக்கும் அடிக்கப்படுதலுக்கும் உதைக்கப்படுதலுக்கும் மிதிக்கப்படுதலுக்கும் ஆடை களையப்படலுக்கும் பாலியல் வல்லுறவுக்கும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கும் பாலியல் தொல்லைகளுக்கும் குண்டாந்தடி, மரப் பொல்லு அல்லது பிரம்பு, விறகு, பொல்லுக்கள் அல்லது விக்கட்டுக்கள், வயர்கள் மற்றும் உலோகச் சங்கிலிகள் போன்ற பொருட்களைக் கொண்டு வேதனை செய்யப்படுதலுக்கும் மண்டியிடச் செய்யப்படலுக்கும் முழங்காலில் நடப்பதற்கும் காற்பாதங்களில் அடிக்கப்படலுக்கும் பெருவிரல்களால் மணிக்கட்டுக்களால் மற்றும் கணுக்கால்களினால் தொங்கவிடப்படலுக்கும் தீயினால் சுடப்படலுக்கும் பல்வேறு வழிகளினால் மூச்சுத்திணறச் செய்யப்படலுக்கும் எரியும் உணர்வினை ஏற்படுத்துவதற்காக மிளகாய்த் தூள் அல்லது பெற்றோல் பயன்படுத்தப்படலுக்கும் முகங்கொடுத்துள்ளனர். பொதுமக்கள் முன்னிலையில் அடிப்பதன் மூலம் அல்லது கைகளுக்கு விலங்கிடல் மூலம் அவமானப்படுத்தப்படல், கைதின் போது அல்லது தேடுதலின் போது ஊடகத்தினைப் பயன்படுத்தல், பாதிக்கப்பட்டுப் அப்பாதிப்புடன் உயிர் வாழ்பவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் பற்றி அவமானப்படுத்தும் பகிரங்க அறிவித்தல்கள் மற்றும் செய்திகள் மற்றும் சித்திரவதை செய்கையில் சிரிக்கும் குரூரம் ஆகியனவும் அனுபவிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டுப் பாதிப்புடன் உயிர் வாழ்பவர்கள் தமக்கு உணவு, நீர் வழங்கப்படவில்லை என்றும் தம்மைத் தூங்க விடவில்லை என்றும் முறைப்பாடு செய்துள்ளனர்.

2. **சாட்சியமளிப்பதில் உள்ள சிரமங்கள்:** சித்திரவதைக்கு முகங்கொடுத்து அதன் பாதிப்புடன் வாழ்ந்து வருபவர்கள் சக்தியின்மைக்கும் வன்முறை பற்றிப் பேசுவதுடன் தொடர்புடைய வெட்கத்திற்கும் அச்சத்துக்கும் முகங்கொடுத்து வருகின்றனர். மேலும் துயருறல் மற்றும் பாதிப்புறுநிலை ஆகியவை ஒப்புக்கொள்ளப்படாமைக்கும் இவர்கள் முகங்கொடுக்கின்றனர். ஏன் சித்திரவதை நடந்தது, அது எதைக் குறிக்கின்றது, அது பற்றிப் பகிர்ந்துகொள்ள முடியுமா மற்றும் அது ஏனையோரினால் எவ்வாறு புலனுணரப்படுகின்றது என்பவை தொடர்பாக நீண்ட காலம் அல்லாடுவதையே மிகவும் தனிப்பட்ட அனுபவங்கள் தேவைப்படுத்துகின்றன. அதிகமான சந்தர்ப்பங்களில் சித்திரவதையினால் பாதிக்கப்பட்டவர்கள் வறியவர்களாக இருக்கின்றனர் மேலும் மிகவும் வரையறுக்கப்பட்ட சமூக அல்லது அரசியல் செல்வாக்கினையே இவர்கள் கொண்டுள்ளனர். இதனால் இவர்கள் முறைப்பாடுகளை மேற்கொள்வதில்லை. பாலியல் வன்முறையினைச் சித்திரவதையின் வடிவமாக அடையாளம் காண்பதற்குப் பாதிப்புடன் வாழ்ந்து வருபவர்கள் அவசரப்பட்டும்

தர்க்கரீதியான காரணம் இன்றியும் முடிவெடுக்காத உதவியினைப் பெறாதவர்களாக இருக்கின்றனர்.

3. **தேவைப்படும் பல்வாறான உதவிகள்:**

அ. **உடல், உள, சமூக மற்றும் பொருளாதார மீளலுக்கான உதவி:** பாதிப்புடன் வாழ்ந்து வருபவர்கள் அவர்களின் உடல் மற்றும் உள ஆரோக்கியம், அவர்களின் குடும்ப மற்றும் சமூக உறவுகள், அவர்களின் வாழ்வாதாரம் மற்றும் நிதிப் பாதுகாப்பு ஆகியவை தொடர்பில் மீளலுக்கு உதவி தேவைப்படுபவர்களாக இருந்தனர். கௌரவம் இழக்கப்பட்ட உணர்வில் இருந்து மீள்வதற்கு உதவி தேவைப்படுகின்றது. நிரந்தரமான மற்றும் நீண்டகால உடல் மற்றும் உளசமூக அங்கவீனம் மற்றும் இடர் மற்றும் தலைமுறைகளுக்கிடையிலான தீங்கு ஆகியவற்றுக்கு உதவிகள் பதிற்செயற்பாடாற்ற வேண்டும். இரண்டாம் நிலைப் பழிவாங்கலினால் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கும் நண்பர்களுக்கும் உதவி தேவைப்படுகின்றது.

ஆ. **பரிகாரத்திற்காக முறைசார் நிறுவனங்களை ஈடுபடுத்துவதற்கான உதவி:** பாதிப்புக்குள்ளாகிப் பாதிப்புடன் வாழ்ந்து வருபவர்கள் முறைப்பாடு செய்தால், முறைப்பாட்டுச் செயன்முறையினையும் சாத்தியமான பலாபலன்களையும் புரிந்துகொள்வதற்காக நிறுவனங்களைக் கையாளுவதற்கு அவர்களுக்கு உதவி தேவைப்பட்டது. மீள் மன அதிர்ச்சிக்கு உள்ளாதல் உள்ளடங்கலாக நிறுவன ரீதியான சவால்களை எதிர்கொள்ள அவர்களுக்கு உதவி தேவைப்பட்டது: அனுபவத்தினைப் பல தடவைகள் பகிர்ந்துகொள்ள வேண்டிய இடர், நம்பப்படாமல் இருக்கும் அனுபவம், குற்றஞ்சாட்டப்படல், அதிகாரத்திலுள்ளவர்களால் கண்டிக்கப்பட்டு அச்சுறுத்தப்படல் சட்டரீதியான கால வரம்புகளின் அடிப்படையில் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ள மறுத்தல். இவர்களுக்குப் பொதுவாக சட்டத்தரணிகளின் பிரதிநிதித்துவமும் வழக்குப் பணியாளர் உதவியும் தேவைப்படுகின்றது.

4. **பழிவாங்கலின் பல்வேறு வடிவங்கள்:**

அ. **புனைந்துகட்டப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு எதிர்வழக்காட நிர்ப்பந்திக்கப்படல்:** பாதிப்புடன் வாழ்பவர்களுக்கு எதிராகப் பொதுவாகப் பொய்யான குற்றவியல் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. பொதுவாக, சட்டவிரோத மதுபானம் வைத்திருந்தமை அல்லது போதைப்பொருள் வைத்திருந்தமை அல்லது அரசாங்க அதிகாரி ஒருவருக்கு இடைஞ்சல் ஏற்படுத்தியமை. இது ஒரு தண்டனையின் வடிவமாக அல்லது சித்திரவதைக்கு எதிராக முறைப்பாடு செய்வதைத் தடுப்பதற்கான ஒரு வழியாகவே புலப்படுகின்றது. பாதிப்புடன் வாழ்பவர்கள் முகங்கொடுக்க வேண்டியிருக்கும் உடனடியான அச்சுறுத்தலாக இவ்விடயங்கள் அமைகின்றன: நீதிமன்ற நாட்களில் வருகை தராவிட்டால் கைது செய்யப்படலாம் என்ற அச்சுறுத்தல், புனையப்பட்ட சாட்சியங்கள் அல்லது ஊழல் நடவடிக்கைகள் சிறைவாசத்திற்கு இட்டுச்செல்லலாம் என்ற அச்சம். சட்ட முறைமையில் காணப்படும் தாமதங்கள் காரணமாக, பாதிப்புடன் வாழ்பவர்கள் அதிருப்திக்கும் நிதிக் கஷ்டங்களுக்கும் உடல் ரீதியான அழுத்தங்களுக்கும் உணர்வு ரீதியான தாக்கங்களுக்கும் முகங்கொடுக்கின்றனர். மேலும் இவர்கள் இகழ்ச்சிக்கும் சமுதாய உறுப்பினர்களினதும் சில நேரங்களில் குடும்ப உறுப்பினர்களினதும் உதவி இழக்கப்படலுக்கும் முகங்கொடுக்கின்றனர்.

ஆ. **பாதிப்புடன் வாழ்பவர்களை அச்சுறுத்தல், துன்புறுத்தல் மற்றும் பலவந்தப்படுத்தல்:** பாதிப்புடன் வாழ்பவர்கள் மேலதிக வன்முறைக்கும் குடும்ப உறுப்பினர்களினதும் வீடுகளினதும் பாதுகாப்புக்கான அச்சுறுத்தலுக்கும் வாழ்வாதார இழப்புக்கும் நிதிப் பாதுகாப்பு இழப்புக்கும் முகங்கொடுக்கின்றனர். இவர்கள் குற்றத்தினை நிகழ்த்தியவர்களின் பலவந்தப்படுத்தலுக்கும் குற்றத்தினை நிகழ்த்தியவர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் நிறுவனங்களைச் சேர்ந்த ஏனையவர்களின் பலவந்தப்படுத்தலுக்கும் குற்றத்தினை நிகழ்த்தியவரின் சார்பில் பாடசாலை அதிபர்கள் மற்றும் சமயத் தலைவர்கள் போன்ற சமுதாயத் தலைவர்களின் அழுத்தங்களுக்கும் கூடப் முகங்கொடுக்கின்றனர். சில சந்தர்ப்பங்களில் பழிவாங்கல் காரணமாகப் பாதிக்கப்பட்டவர் உயிரிழக்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் சிலர் தொடர்ச்சியான தொல்லைகொடுத்தல் காரணமாகத் தனியாக அல்லது குடும்பங்களுடன் நிரந்தரமாக வேறு இடங்களுக்குக் குடிபெயர நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு வேறு

இடங்களுக்குச் செல்லாமல் இருந்தவர்கள் தொடர்ச்சியான தொல்லைகொடுத்தல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

இ. **துண்டிக்கப்பட்ட சமூக உறவுகள்:** சித்திரவதையினால் பாதிக்கப்பட்டு அதன் தாக்கத்துடன் வாழ்ந்து வருபவர்கள் பகிரங்கமாக அவர்களை அவமானப்படுத்தித் தனிமைப்படுத்தும் முயற்சிகளுக்கும் முகங்கொடுத்து வருகின்றனர். பாதிக்கப்பட்டு வாழ்ந்து வருபவர்கள் அல்லது அவரின் குடும்ப உறவினர்கள் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என அல்லது பாதிக்கப்பட்டவருக்கு மனோவியாதி இருக்கின்றது எனக் குற்றத்தினை நிகழ்த்தியவர்கள் பகிரங்கமாகக் கூறி வருகின்றனர் அல்லது பாதிக்கப்பட்டவர் ஒரு குற்றவாளி எனக் குடும்பத்திடமும் நண்பர்களிடமும் கூறிவருகின்றனர். பாதிக்கப்பட்டவர் அவரின் குடும்பத்துடனும் வாழ்க்கைத் துணையுடனும் பிள்ளைகளுடனும் கொண்டுள்ள உறவினை இது பாதித்துள்ளது. பாதிக்கப்பட்டவர்களை இழிவுபடுத்துமாறும் அவர்களுக்கு வழங்கப்படும் உதவியினைத் துண்டிக்குமாறும் சமுதாயத் தலைவர்களுக்கும் அழுத்தம் வழங்கப்படுகின்றது.

5. **சித்திரவதையினைச் சாதாரணமாக்கல்:**சித்திரவதை அசாதாரணமானதாகக் கருதப்படுவதில்லை அல்லது வன்முறையாகக் கூடக் கருதப்படுவதில்லை என்பதையே சித்திரவதையினைச் சாதாரணமாக்குவது குறிக்கின்றது. இது ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஒன்றாக நியாயப்படுத்தப்படுகின்றது. இது குறிப்பிடுவதற்கோ அல்லது முறைப்பாடு செய்வதற்கோ தகுதியான ஒன்றல்ல எனப் பாதிக்கப்பட்டவர்கள் நம்புகின்றனர் அல்லது முறைப்பாடு எனும் அபாயநேர்வுக்குட்படத் தகுதியற்றது என நம்புகின்றனர். சித்திரவதையினை அரசும் அரசு சாராச் சேவை வழங்குனர்களும் ஏற்றுக்கொண்டு அதற்கு பதிற்செயற்பாடாற்றத் தவறுவதையே இது குறிக்கின்றது.

6. **பாதிக்கப்பட்டவர்களின் பல குழுக்களுக்கும் பொதுமக்கள் ஒத்துழைப்பின்மை:**பொதுமக்களின் அபிப்பிராயம் பொதுவாக நெறி சார்ந்த மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இது குறைந்த வருமானங்களைக் கொண்ட சமுதாயங்களைச் சேர்ந்தவர்கள், பாலியல் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள், ஏற்றுக்கொள்ள முடியாதது எனப் புலனுணரப்படும் பால்நிலை அடையாளத்தினைக் கொண்டவர்கள், சிறைக்கைதிகள் போன்றவர்களை இந்த மதிப்பீடுகள் அங்கீகரிப்பதாகவோ அவர்களுக்கு உதவுவதாகவோ புலப்படவில்லை. போதைப்பொருள் பாவனை தொடர்பான சமூகத்தின் அதிருப்தி, பயங்கரவாதத்துடனான தொடர்புகள் பற்றிய சமூகத்தின் அதிருப்தி ஆகியனவும் பாதிப்புடன் வாழ்ந்து வருபவர்களை இகழ்ச்சிக்கு ஆளாக்கி அவர்களின் முறைப்பாடுகளை மௌனிக்கச் செய்கின்றன.சட்டத்துக்குப் புறம்பான தண்டனைகள் பற்றிய பொதுமக்களின் திருப்தி குற்றமிழைப்பவர்களை இயலுமாக்குவதாக அடையாளம் காணப்பட்டது. இகழ்ச்சிக்கு ஆளாக்கப்படுவதில் இருந்தும் தாக்குதல்களில் இருந்தும் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்க அரச நிறுவனங்கள் தவறிவிட்டன. பாதிக்கப்பட்டவர்களுக்குக் கௌரவத்தினையும் பாதுகாப்பினையும் அவர்களின் உரிமைகளையும் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கும் இந்த நிறுவனங்கள் தவறிவிட்டன.

7. **பாதுகாப்பின்மை மற்றும் பற்றாக்குறையான அரச பொறுப்பு:**

அ. **பாதுகாப்பு சேவைகளின்மை:**இலங்கையில் சித்திரவதையினால்பாதிக்கப்பட்டவர்களுக்கு சமயத்திற்கேற்றதும் வினைத்திறன்மிக்கதுமான பாதுகாப்பு மற்றும் மீளலுக்கான அரச அனுசரணையளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் எதுவும் காணப்படவில்லை.

ஆ. **ஒத்துழைப்பின்மை:**பாதிக்கப்பட்டவர்களுக்கான ஒத்துழைப்பாக நிவாரணம் வழங்குவதற்கான பொறிமுறையினைக் கொண்ட பொறுப்புடைய அலுவலர்களைக் காணமுடியாதுள்ளது. சட்ட மருத்துவ அலுவலர்கள் மற்றும் நீதவான்களுக்கான அறிக்கையிடல் உத்தியோகபூர்வமான முறைப்பாடாகவும் புலன்விசாரணையாகவும் அல்லது தப்பியவர்களுக்கான ஒத்துழைப்பாக மாற்றப்படமாட்டாது. அவ்வாறு தப்பியவர்களுக்கு அவர்களது முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பது பற்றிய தகவல் எதுவும் வழங்கப்படுவதில்லை. சித்திரவதை தொடர்பாக குற்றவியல் வழக்குகளை சட்டமா அதிபர் தாக்கல்செய்யும் பொழுது பாதிக்கப்பட்டவர் மற்றும் வழக்கிலுள்ள பழிவாங்கலின் தாக்கத்தினைக் கருத்திற் கொள்வதற்கு தவறிவிடுகின்றார். உரிமைகள் மீறப்பட்டமை தொடர்பில் விசாரணைசெய்வதற்காக உயர் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்ட வழக்குகளில் வழக்கு தொடர்வதற்கான காலக்கெடு, கடமையைச் செய்யத் தவறுகின்ற மேற்பார்வை அலுவலர்கள் பொறுப்புவகிப்பதற்கு தொடர்ந்து

தவறுகின்றமை மற்றும்பாதிக்கப்பட்டவர்களுக்கு சார்பாக அரசினால் நீதிமன்றத்திற்கு முன்வைக்கப்படாமை உள்ளடங்களான பல்வேறு சவால்களை பாதிக்கப்பட்டவர்கள் எதிர்நோக்குகின்றனர்.

**அரசுக்கான கொள்கைப் பரிந்துரைகள்**

சித்திரவதையினால் பாதிக்கப்பட்டு அந்தப் பாதிப்புடன் வாழ்ந்துவருபவர்களுக்கான செயற்திறன்மிக்க பாதுகாப்பினை உறுதிப்படுத்துவது இரண்டு நோக்கங்களை அடைவதாக முன்மொழியப்பட்டுள்ளது. (அ) மீளலுக்காகப் பாதிக்கப்பட்டவரை மையப்படுத்திய ஒரு பரிபூரணமான அணுகுமுறை (ஆ) நீதிக்கான பாதுகாப்பான மற்றும் செயற்திறன்மிக்க அணுகல்.

1. **மீளலுக்காகப் பாதிக்கப்பட்டவரை மையப்படுத்திய அணுகுமுறை: பாதிப்புடன் வாழ்ந்து வருபவர்களும் அவர்களின் குடும்பங்களும் சித்திரவதை செய்யப்பட்ட அல்லது மோசமாக நடத்தப்பட்ட அனுபவத்தில் இருந்து மீண்டு வருவதற்காக உதவியினையும் பாதுகாப்பினையும் பெறவேண்டும். இது அரசுக்குப் பரிந்துரைக்கப்படுகின்றது:**

   ***சித்திரவதையினால் பாதிக்கப்பட்டு அந்தப் பாதிப்புடன் வாழ்ந்து வருபவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் மீளலுக்காகவும் பாதுகாப்பிற்காகவும் இலங்கை பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளைப் பாதுகாத்தல் அதிகாரசபையினால் அரச வளமிடப்பட்ட பல்துறை சார்ந்த நிகழ்ச்சித்திட்டம் ஏற்று நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.***நிகழ்ச்சித்திட்டம் மீளலுக்கான உதவியினை வழங்கி (உடல், உள, நிதி மற்றும் சமூக) அரச துறையினைச் சேர்ந்த மருத்துவ மற்றும் உளவியல் நிபுணர்களைப் பயிற்றுவித்து அவர்களை ஈடுபடுத்தவேண்டும் என்பதுடன் இரண்டாம் நிலைப் பழிவாங்கலுக்கு உட்பட்ட குடும்பத்திற்கும் ஏனையோருக்கும் உதவியினை வழங்கவேண்டும். பாதிப்புடன் வாழ்ந்து வருபவர்கள் சமூகத்துடன் ஒருங்கிணைவதற்கு உதவுவதற்காக சமுதாயங்களில் பணியாற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடனான ஆற்றுப்படுத்தல் முறைமைக்கும் ஏற்பாடுகள் வழங்கப்படவேண்டும். சித்திரவதை அல்லது மோசமாக நடத்தப்பட்டமை ஆகியவற்றின மேற்கொண்டை தொடர்பிலான அல்லது அவற்றினை இயலுமாக்கியவை தொடர்பிலான சம்பவங்களில் சம்பந்தப்பட்டுள்ள அரச நிறுவனங்கள் மற்றும் செயற்படுனர்களில் இருந்து சுயாதீனம் பெற்றதாக நிகழ்ச்சித்திட்டம் வடிவமைக்கப்படவேண்டும்.

2. **பாதுகாப்பும் செயற்திறனுமிக்க நீதிக்கான அணுகல்:** பாதிப்புடன் வாழ்ந்து வருபவர்கள் முகங்கொடுக்கும் மீள் பழிவாங்கல்கள் மற்றும் அடக்குமுறைகள் நீதிக்கான அர்த்தபூர்வமான அணுகலை அடைவதற்காக அவை நீக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தப் பரிந்துரைக்கப்படுகின்றது.

   ***சித்திரவதையினால் பாதிக்கப்பட்டு அந்தப் பாதிப்புடன் வாழ்ந்து வருபவர்களைக் கையாளும் ஒவ்வொரு அரச நிறுவனமும் சித்திரவதையினால் பாதிக்கப்பட்டு வாழ்ந்து வருபவர்களுக்கான விசேட பாதுகாப்புக் கடப்பாடுகளுடன் நிறுவன ரீதியான கொள்கைகளை வடிவமைத்து, ஏற்று அங்கீகரித்து அமுல்படுத்த வேண்டும்.***பொலிஸார், சிறைச்சாலைகள்,பொதுநிர்வாகம்,நீதித்துறை, சட்ட மருத்துவ அதிகாரிகள்,சுகாதார நிர்வாகம்,சட்ட மாஅதிபர் அலுவலகம்,பாதிக்கப்பட்டவர்களையும் சாட்சிகளையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகாரசபை,தேசிய பொலிஸ் ஆணைக்குழு,சட்ட உதவி ஆணைக்குழு,தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றினால் நிறுவனத்திற்கெனத் தனித்துவமான கொள்கைகளை ஏற்றுஅங்கீகரிக்கவேண்டும். அக்கொள்கைகள் பாதுகாப்பான மற்றும் அவசரப்பட்டும் ஆராயாமலும் எடுக்கப்படாத உதவியினை வலியுறுத்தவேண்டும் என்பதுடன் பாதிக்கப்பட்டு வாழ்ந்து வருபவரின் மீளலை முன்னுரிமைப்படுத்த வேண்டும். அத்துடன் முறைப்பாடுகள் மீது இருக்கும் கால எல்லை தொடர்பான சட்டத் தேவைப்பாடுகளை அகற்றவேண்டும். மேலும் பாதிக்கப்பட்டவர்களின் ஒத்துழைப்புடனும் இணக்கத்துடனும் துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். சித்திரவதைகளின் வடிவங்களையும் பாதிக்கப்பட்டவர்கள் முகங்கொடுக்கும் பழிவாங்கல்களின் வடிவங்களையும் கொள்கைகள் விசேடமாக அடையாளம் கண்டு அவற்றினை நீக்கவேண்டும்.

இந்தக் கொள்கைச் சுருக்கம் Dignity மற்றும் எடின்பேர்க் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் உருவாக்கப்பட்டுள்ளது.

DIGNITY
DANISH INSTITUTE AGAINST TORTURE

THE UNIVERSITY of EDINBURGH
School of Social and Political Science

இதில் வெளியிடப்பட்டுள்ள கருத்துக்கள் இந்த ஆக்கத்தின் ஆசிரியர்களின் கருத்துக்களாகும் என்பதுடன் அவை Dignity மற்றும் எடின்பேர்க் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டினை பிரதிநிதித்துவம் செய்யவில்லை.

**மேலதிக தகவல்களுக்கு ஆசிரியரைத் தொடர்புகொள்ளவும்:**

ஏர்மிசா டேகல்:ermiza@gmail.com

தியாகி பியதாச: thiagip@gmail.com

LAW & SOCIETY TRUST

**சட்டத்திற்கும் சமூகத்துக்குமான அறநிலையம்**

**3,கின்சி டெரஸ்**
**கொழும்பு - 8**
**இலங்கை**

**தொலைபேசி:**+94(0)112684845
**தொலைநகல்:**+94(0)112686843
**மின்னஞ்சல்:**admin@lstlanka.org

www.lstlanka.org